வருவாயிலிருந்து துவக்கப் பாடசாலைக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு ஒற்வொரு ஒன்றியத்திற்கும் நிதி வழங்கியுள்ளார்கள். அதுபோன்ற நிலையை இந்த நேரத்தில் நம்முடைய அரசு பின்பற்றுமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இதைவிட அதிகமான வருமானம் வந்துகொண்டிருந்தது. எனவே சில குறிப்பிட்ட காரியங்களுக்காக அவைகளை ஒதுக்க முடிந்தது. ஆனால் இப்போது பொதுவாகச் செய்யப்படுகின்ற அரசு நல திட்டங்களில் இந்தத் தொகையும் சேர்கின்றது.

'ஒக்கலிக கவுடர்' இனத்தை மிகவும் பின்தங்கியோர் பட்டியலில் சேர்த்தல்.

*6879 பேராசிரியர் க. பொன்னுசாமி :

திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாநிலத்தில் உள்ள 'ஒக்கலிக கவுடர்' இனத்தை மிகவும் பின்தங்கியோர் பட்டியலில் சேர்க்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

(அ) மாநிலத்தில் உள்ள 'ஒக்கலிக' கவுடர் இனத்தை மிகப் பின்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கும் செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

பேராசிரியர் க. பொன்னுசாமி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள அந்த இனத்தைக் கருத்திற்கொண்டு ஆய்வு நடத்தி இதைச் சேர்ப்பதற்கு அரசு பரிந்துரைக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோருடைய நிலைமைகளை அறிந்து அவர்களுடைய முன்னேற்றத்திற்காகப் பரிந்துரைகளைச் செய்யுமாறு அமைக்கப்பட்ட இரண்டு குழுக்கள், முதலாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவானாலும், அதற்குப் பிறகு அமைக்கப்பட்ட நலக் குழுவானாலும், அப்படிப்பட்ட ஒரு பரிந்துரையைச் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1990 ஏப்ரல் 16]

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் பின்தங்கிய வகுப்பிலே சேர்ப்பதற்கு என்ன வரைமுறையை அரசு வகுத்திருக்கிறது? அதிலே சேர்ப்பதற்கு வருமான வரம்பு ஏதாவது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிவிக்க இயலுமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர். மு. கருணாநிதி : முதல் வரைமுறை, அவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களாக இருக்கவேண்டும். அவர்களுக்கு மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களாக இருக்கிற இலக்கணம், சமுதாயத்தில், கல்வித் துறையில், வேலைவாய்ப்பில் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாமல் பின்தங்கி இருப்பவர்களாக இருக்கவேண்டும். Socially Educationally என்கின்ற அடிப்படையிலேதான் இது ஆராயப்படுகிறது.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒக்கலிக சமுதாய மக்கள் கோவை, பெரியார் மாவட்டங்களில் பரவலாக வாழ்ந்து வருகிறார்கள். இந்த இன மக்களில் ஒக்கலிக்க கவுடர்கள் என்றும், கெம்பட்டிய ஒக்கலிகர் என்றும், துறையச்சியக்கர் என்றும் இதில் பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன. இதில் கர்நாடக மாநிலத்தில் இவ்வின மக்கள் மிகவும் பின்தங்கிய வகுப்பில் இருக்கிறார்கள். ஆகவே இவற்றை அரசு ஆராய்ந்து இவர்களை மிகவும் பின்தங்கியவர்கள் பட்டியலில் சேர்ப்பதற்கு இனியாவது முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஒக்கலிகர் முதலிலே வக்கலகர் என்றும், ஒக்கலிகர் என்றும், கப்பிலியர் என்றும், கப்பிலியர என்றும் ஒக்கலிய கவுடர் என்றும், ஒக்கலிக கவுண்டர் என்றும், ஒக்கலிக கவுண்டா என்றும் இப்படி பல பிரிவினர்களாக இருந்தார்கள். இவர்களை எல்லாம் இணைத்துத்தான் ஒக்கலிகர் என்று அமைக்கப்பட்டது. அவர்களுடைய மொத்த தொகை 2,88,000 என்று புள்ளிவிவரம் கூறுகிறது. அவர்கள் கோவையிலே மட்டுமல்லாமல், மதுரை, கோவை. தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இரண்டு பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுக்களும் நன்றாக ஆராய்ந்த பிறகுதான், இவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க பரிந்துரை செய்யவில்லை.

திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் கருத்தைச் சொல்கிறபோது, கர்நாடக மாநிலத்தில் ஒக்கலிக் கவுடர்கள் மிகவும் பின்தங்கியவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அதுபோன்று கர்நாடக மாநிலத்தில் இருக்கு

மானால் நம்முடைய தமிழ் நாட்டிலும் இத்தகைய பரிந்துரையைச் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிவிக்க விரும்புகிறேன்.

9-15 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கெனவே மிகவும் பின் தங்கியோர் பட்டியலில் அதிக வகுப்பினரைச் சேர்த்திருப்பதாக ஒரு குறைபாடு இருக்கிறது. இப்படி சேர்த்துக்கொண்டே போனால் அவர்கள் கிளர்ச்சி நடத்துவார்கள். எதிர்க்கட்சியிலே இருக்கிற உறுப்பினர்களும் அதை ஆதரிப்பார்கள்.

தேசிய படிப்புதவித் தொகை.

*6604 **திரு. எஸ். டி. உகம்சந்த்** :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

National Merit Scholarship வாங்குவதற்கு உள்ள வருமான வரம்பை உயர்த்த மாநில அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி கேட்கப்பட்டுள்ள முறை காரணமாக இந்த விடை இல்லை என்று அதிகார பூர்வமாக தெரிவிக்கப்பட்டாலும்கூட, மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்துள்ளதா என்பதற்கு பதில் மாநில அரசுக்கு மத்திய அரசு வேண்டுகோள் விடுத்துள்ளதா என்று இருக்குமானால், வேண்டுகோள் விடுத்து அது ஏற்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு தமிழக அரசுக்கு வருமான வரம்பை உயர்த்த வேண்டும் என்ற குறிப்பை அனுப்பியிருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். அந்த வருமான உயர்வு எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா? அத்தோடு மட்டும் அல்லாமல் ஸ்காலர்ஷிப் வழங்குவதற்காக இந்த மாநிலத்தில் எத்தனை பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் எத்தனை பேர் இன்றைக்கு உயர் கல்வியை அடைந்திருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த தேசிய மாணவர்கள் உதவித் தொகைத் திட்டம் என்பது, படிப்பு உதவித் தொகை வழங்குவது என்பது முத